உ
சிவமயம்

# இந்து சாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

HINDU ORGAN

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

பிரதி விலை: சதம் 20.

ஆரம்பம்: விரோதி ஞூ (1889) ஆவணிமீ 28-ம் உ

அச்சகம்: சைவபிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி: 356

புத் - கூ0] யாழ்ப்பாணம் காலயுத்தி ஞூ ஆனி மீ உங-உ வெள்ளிக்கிழமை (7-7-1978) [ ூல - கஉ

# சைவத் திருமுறைப் புதிய ஏடுகளைத் தரிசிக்க வாரீர்

## நகுலேசுவரம் இருந்து திருக்கேதீச்சரம் எழுந்தருளும் சிறப்பு வைபவம்

திருக்கேதீச்சரத்துக்குக் கதிர்காமக் கந்தன் விழாக்காலத்தில் திருஞானசம்பந்தர் அபிடேகத் திருத்தொண்டுக்காக ஆண்டுதோறும் பாதயாத்திரை செய்யும் பக்தர்கள் இம்முறை திருமுறை ஏடுகளை இந்த யாத்திரைப் பாதை வழியாக எழுந்தருளச் செய்யும் விசேட வைபவத்தை ஒழுங்கு செய்திருக்கின்றனர்.

ஏடெழுதிய பெரியார் திருக்கேதீச்சர அடியார்களில் ஒருவர், வாழ்நாளை இப் புண்ணிய தலத்திலே தொண்டுக்காக அர்ப்பணித்திருக்கும் இளைப்பாறிய உடையார் பொன்னுவெளி திரு. கு அருளம்பலம் அவர்களின் அரும் முயற்சியைத் திருக்கேதீச்சர பாதயாத்திரைப் பெருந்தொண்டர் சைவசித்தாந்த ஞானமணி மு. ஞானப்பிரகாசம் அவர்கள் கண்டுகளித்து அத் திருத்தொண்டினை அகிலமும் அறிய வைக்க விரும்பியது பாராட்டுக்குரியது.

வைபவத்தின் மகத்துவத்தை உணர்த்த அன்பர் சிலரின் வேண்டுகோளின்படி, யாழ்ப்பாணத்திலுள்ள நான்கு முக்கிய சைவ நிலையங்களில் திருமுறை ஏடுகள் விசேஷ அபிஷேகம், பூசை விழாக்கள் சகிதம் பூசிக்கப்படும் அன்பர்கள் எல்லோரும் திருமுறை ஏடுகளைத் தரிசிக்க வேண்டுமென்றும் ஒழுங்கு செய்துள்ளனர்.

12-7-78 புதன்கிழமை மாலை கீரிமலைச் சிவன் கோவிலிலும், 13-7-78 வியாழக்கிழமை காலை வண்ணை நாவலர் பாடசாலையிலும், 14-7-78 வெள்ளிக்கிழமை மாலை வண்ணை சிவன் கோவிலிலும், 15-7-78 சனிக்கிழமை மாலை நல்லை, திருஞானசம்பந்தர் ஆதீனத்திலும், 21-7-78 திருக்கேதீச்சரத்தில் இவ் விழா நிறைவு பெறும்.

——

## மகா சங்காபிஷேகம், தண்டிகைத் திருவிழா

பாழ். நாயன்மார்கட்டு அருள்மிகு இராச ராஜேஸ்வரி பேயச்சியப்பாள நவோத்திரசகஸ்ரமகாசங்காபிடேகம் ஆனிஉத்திர புண்ணிய தினமாகிய 11-7-78 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு நிகழும். அன்று மாலை பஜனை பண்ணிசை, மங்கல வாத்தியக் கச்சேரி நிகழ்ந்து அதையடுத்து திருவூஞ்சலும், தண்டிகைத் திருவிழாவும் நிகழும். (ந நி)

## எண்பதாம் வயதில்— எண்பது நாட்களில் தேவாரம் திருவாசகம் ஏடெழுதிய இறை நேறி

ஏடும் எழுத்தாணியும் கொண்டு இளமையிற் கல்வி கற்றவர் ஒருவர் எண்பதாம் வயதிலும் இவற்றை மீண்டும் கையாள எண்ணியஎண்ணம் பண்ணிய புண்ணியத்தின் விளைவேயாகும்.

நைட்டிகச் சைவ வாழ்வில் நியம அநுட்டானச் செம்மலாகத் திகழும் பொன்னுவெளிப் பழைய உடையாரைத் திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபைத் தலைவராயிருந்த வீரர் கந்தையா வைத்தியநாதன் நன்கு கணித்து அப்புராதன கோயிலுக்கருகாமையில் வாழ்ந்து திருத்தொண்டாற்ற வழி வகுத்தனர்.

அவ் வழிச் செவ்வனே வளர்ந்து இந்த ஏடெழுதும் கலையில் ஏற்றி வைத்திருக்கின்றது.

## திருமாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் (மாவையாதீனம்) திருவிழா ஒழுங்குகள்.

### பூசை நேரங்கள்.

| மாலை | | இரவு | |
|---|---|---|---|
| 6-00 மணி | உஷக்காலம் | 6-00 மணி | சாயரட்சை பூசை |
| 9-00 மணி | காலைச் சந்தி பூசை | 6-30 மணி | ஸ்தம்ப பூசை |
| | | 7-30 மணி | இரண்டாம்காலபூசை |
| 9-30 மணி | தம்ப பூசை | 7-40 மணி | வசந்த மண்டப உற்ஸவர் பூசை |
| 10-15மணி | வசந்தமண்டப உர்ஸவர் பூசை | 8-00 மணி | திருவிழா |
| 10-30மணி | திருவிழா | 10-00 மணி | அர்த்தசாம பூசை |
| ந. ப. 12-00மணி | உச்சிக்கால பூசை | | |

உர்ஸவங்களுள் 5, 7, 13, 15, 16, 17, 19, 22ஆந் திருநாள்களின் போதும் இரதோற்ஸவம், தீர்த்தோர்ஸவங்களின் போதும் பூசை நேரங்களில் மாற்றமிருக்கும். இக்காலங்களில் நடைபெறும் பூசை ஒழுங்குகள் விளம்பரப் பலகையிற் குறிக்கப்படுவதோடுமுதல் நாளே பக்தர்களுக்கும் அறிவிக்கப்படும்.

தெய்வேந்திர முகூர்த்தமாகிய நண்பகல் 12 மணிக்கு துவஜாரோகணம் நிகழும்.

## பண்டிதமணிக்குப் பாராட்டு விழா அமைக்க பல சங்கங்களின் ஒருமித்த முடிவு.

வண்ணை, நாவலர் மகாவித்தியாலயத்திலே சென்றகிழமை பண்டிதர் ச. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் ஒரு பொதுப் பாராட்டு விழா ஒழுங்குபண்ணிப் பண்டிதமணிக்குப் பாராட்டுரைக்க ஆகவேண்டிய ஏற்பாடுகள் அமைப்பதற்கு ஒரு குழு தெரிவு செய்யப்பட்டது.

பண்டிதமணியின் பலவேறு கட்டுரைகளையும் விசேட சொற்பொழிவுகளையும திரட்டி ஒரு மலர் வெளியிடுதல் பொருத்தமென திரு. சு பஞ்சாட்சரம ஆசிரியரின் ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பாராட்டு விழாக் குழுத் தலைவர் பண்டிதர் ச. சிதம்பரப்பிள்ளை, செயலாளர் திரு. அ. பஞ்சாட்சரம் பொருளாளர் த. இராசேந்திரம் ஆகவும் அவர்களுடன் வேறு நிருவாக அங்கத்தவர்களும் செயலாற்றுவர்.

இப் பணியில் எல்லாச் சங்கங்களும் பண்டிதமணியின் மாணாக்கர்களும், அபிமானிகளும சேர்நது சிறப்பிக்கவேண்டும் என்ற எண்ணம் தெரிவிக்கப்பட்டது

பாவங்கள் நீங்க உலகநலம் உண்டாக.

## மாவைக் கந்தன் மாவிழாக் கண்டு வணங்குவோம்.

இவ்வாண்டு ஆனி 26 ம் நாள் (10-7-78) மாவைக் கந்தன்கோயிலிலே பெருந் திருவிழாக்கள் கொடியேற்றவைபவத்துடன் ஆரம்பமாகின்றன.

தினமும் விசேடஅபிடேகங்களும் சண்முகார்ச்சனை முதலிய நியமங்களும் நடைபெறும். இக் காலத்திலே முருக பக்தர்கள் ஆயிரக்கணக்காக வழிபடுவதற்கு திரள்வார்கள் என்பதை யாவரும அறிவர்.

ஆடி 18 ம் நாள் ஐந்து தேர்கள் அலங்காரமாக அணி உலா வீதிவலம்வரும காட்சி ஆநந்த நிகழ்சசியாகும்.

அடுத்த நாள் அகிலமும் நினைவு கூரும் ஆடி அமாவாசைத் திருநாளிலே கீரிமலைப் புனித புண்ணிய தீர்த்த சமுத்திரத்திலே பக்தர் சமுத்திரமும் கலந்து நிற்கும் விழாக் காட்சி

[வளர்ச்சி 2 ஆம் பக்கம்]

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவராளினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

காலயுத்தி ௵ ஆனி ௴ உ௩-உ வெள்ளி

## ஊன் உட்கொள்வோர் உள்ளளவும் .....!

தேவை எவ்வளவோ அவ்வளவுக்கும் தேடப்படும் பொருளைத் தேடிக்கொடுக்கும் முயற்சியுமிருக்கும் என்பது சாதாரண பொருளாதார விதி.

மச்ச மாமிசம் உண்போரின் தேவையைப் பூர்த்தி செய்ய மிருக பலியும் இதர உயிர் இனக் கொலையு நிகழ்ந்து கொண்டிருக்கும் என்பதைப் பற்றி ஆழமாக யோசிப்போமாயின் இந்த ஆகாத உணவை எவரும் அருந்தா வண்ணம் மக்களுக்கு புத்தி புகட்டுதல் அவசியம் என்றறிவோம்.

இந்த அறிவுப் போதனை அந்நாட்களிலே நாவலர் பெருந்தகையிறை சைவ வினாவிடை, பாலபாடம் முதலிய புத்தகங்கள் மூலம் பள்ளிக்கூட மாணாக்கர்களுக்குப் பயன்படுத்தப்பட்டது அவ்வாறே ஐகதாங்குரவர் வழிவந்த அறிஞர்களும் தொண்டாற்றி வந்தனர். சைவப் பெரியார் சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள் "சைவ போத" புத்தகங்கள் வாயிலாகப் புலாலுண்ணாமை சைவ மக்களுக்குக் கட்டாய விதி என்ற வகையில் விளங்க வைத்ததுடன், உடல் நலம் பேண உதவும் என்ற மருத்துவக் கருத்தினையும் சுட்டிக் காட்டி வந்தனர்.

இத்தகைய பாடப் புத்தகங்களை மாணாக்கர்கள் கற்கும் வாய்ப்பு இக்காலத்திலே பாடசாலைகளிவில்லாமையே மிருகங்களையும் பறவைகளையும் உணவுக்காகப் பலியிடும் பாவச் செயல்கள் நாளுக்கு நாளாக கூடிவரச்செய்கின்றது.

சில காலமாக, சிவசின்னத்துக்குரிய மாபாதகச் செயல் பரவி வருகின்றதென்று சைவ பரிபாலன சபையார் அண்டுப்பிரசுர மூலமும் இந்து சாதனம் வாயிலாகவும் மக்களுக்கு எடுத்துக்காட்டி வருகின்றனர் முன்னொரு காலமுமில்லாத வகையிலே ஆடு, கோழி ஆனினம் ஆலயங்களுக்கு நேர்ந்துவிடப்பட்டு ஆங்கு கையளிக்கப்பட்டபின் ஏலத்திலே விற்பனை செய்யப்படுவதும், அவற்றைக் கிரயங் கொடுத்துப் பெற்றுக் கொள்ளும் வியாபாரிகள் அவற்றைக் கொன்று மாமிசத்தை விநியோகிப்பதும் இப்பொழுது நடைபெறுகின்ற பெரும் பொல்லாங்காகும் என்றும் சபையார் கருத்து விளக்கி இந்நிலைமையை மாற்றுவதற்கு மக்கள் வழிதேட வேண்டும் என்றும் விண்ணப்பித்திருக்கின்றனர்.

சட்டமூலம் இத்தகைய துட்ட முயற்சிகளைத் தடுப்பது முடியக்கூடிய காரியமல்ல. எனவே இந்தப் பரோபகாரப் பணியில் விசேடமாக ஆலயத் தர்ம கர்த்தாக்கள், பரிபாலனஞ் செய்பவர்கள், நேர்த்திக் கடன் செய்வோர் ஒருங்கு சேர்ந்து இயங்குதல் வேண்டும்.

மேலாகப் புலால் உண்ணுதல் பொல்லாங்கு என்ற உண்மையைப் பாடசாலைகள் மூலம் கற்பிப்பதற்குரிய பாட புத்தகங்களுக்கு அரச அங்கீகாரம் பெறுதல் அவசியம்.

ஆசிரியர்கள் இத்தொண்டிலே பெரிய பங்குகொள்ளுதல் முக்கியம். புத்தகங்களுக்கப்பால் சைவ சமய பாடம் படிப்பிக்கும்பொழுது நாவலரும், சைவப் பெரியாரும் இயற்றிய நூல்களிலிருந்து மாமிச போசனம் விலக்கப்பட வேண்டியதைப் பற்றிய போதனைகளை மாணாக்கர்களுக்கு விசேடமாகச் சுட்டிக் காட்டுதல் மிகச் சிறந்த வழியாகும்.

சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள் நாம் என்று சொல்லிவிட்டாற் போதாது, அச்சமயநெறியில் நிற்க வேண்டும். அதற்குரியவற்றை எல்லோரும் நூல்கள் வாயிலாகக் கற்க வசதியளித்தல் பெரும் புண்ணியம் என்பதை மீண்டும் எடுத்துக் காட்டுகின்றோம்.

## உள்ளத்தை உருக்கும் வாசகம் உரைத்த குரவர்

## பாலுடன் கலந்த நீர் போலப் பரமனுடனான பக்தன்

### மாணிக்கவாசக சுவாமிகளுக்கு காணிக்கைப் பூசை
### ( ஆனித் திங்கள் 25, — 9-7-78 )

நால்வர் நாள்களுக்குரிய நட்சத்திரங்கள் நற்சிறப்பு வாய்ந்தன. சித்திரைச் சதயம், வைகாசி மூலம், ஆனி மகம், ஆடிச் சோதி என்றடுத்தடுத்த நான்கு திங்களிலும் குருபூசைப் பொலிவுக்குரிய நட்சத்திரங்களில் "ஆனி மகம்" ஒன்று.

மாணிக்கவாசகப் பெருந்தகை மாதேவனுடன் இரண்டறக் கலந்த பெருமைக்குரிய ஆனி மகநாளில் இப் பெருங் குரவரின் திருவருட் பேற்றினை அறிந்துணர்ந்து உண்மைச் சமயிகளாக நாம் வாழ முயற்சிப்பதுவே குருபூசையின் ஒரு அரிய அம்சமாகும்

திருவாசக அருமையை மக்களுக்கு உணர்த்துமாறு சைவப் பெரியார் இந்த அரிய எட்டாந் திருமுறையைப் பயன்படக்கூடிய சிறு பதிப்பாகச் சைவப் பிரகாச அச்சகத்தின் மூலம் இலவசமாக இருபதாண்டுகளுக்கு முன் வழங்கியதை இங்கே குறிப்பிடுவது நன்று. சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் பிள்ளையின் நூற்றாண்டு விழாக் காலமாகிய இவ்வாண்டில் அப் பெரியாருக்கு அஞ்சலி செலுத்தும் அபிமான முடையார் இக் கைங்கரியத்தை மறுபடியும் செய்தல் நன்று.

## மணிவாசகத்தில் ஒரு மாமணி

"பிணியெல்லாம் வரினும் அஞ்சேன்
பிறப்பினோ டிறப்பும் அஞ்சேன்
துணி நிலா அணியினான் தன்
தொழும்பரோ டழுந்தி அம்மால்
திணிநிலம் பிளந்துங் காணாச்
சேவடி பரவி வெண்ணீ
றணியலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே;

திருநீற்றின் சிறை மூன்று குரவர்கள் பாடிய வகை ஒன்று, திருவாதவூரடிகள் வாழ்த்தியவாறு வேறு.

வெண்ணீறணியாதவரைப் பற்றிப் பிரித்துக் காட்டி திருநீற்றின் மகிமையையும், அந்தச் சிவசின்னத்தை அணிபவர்களின பக்குவத்தையும் மிக நுணுக்கமாகச் சொல்லின்றார் மணிவாசகர்.

அஞ்சுவதியாதுமில்லை அஞ்சவருவதுமில்லை என்றார் அப்பர்.

மணிவாசகனார் அஞ்ச வேண்டியவைகளவைஎன்று நுட்பமாகப்புகட்டுகின்றார்

பாதகர்களைக் காணும் பொழுதே மனிதனுக்கு அச்சம் உண்டாகும் அறியாது கொலையும், கொலை முயற்சியும் செய்யும் அரவத்தை அடல் ஏற்றை வேங்கைவரிப் புலியை இவையன்ன பிறவற்றைக் காணும் பொழுது சுபாவமாக மனிதன் பயப்படுகின்றான். ஆனால் உணமையில் அவற்றுக்கெல்லாம் மேலாக அச்சந்தருபவர்கள் மனித சமூகத்தையே சார்ந்தவர்களாயிருக்கின்றனர். புற்றில் வாழ் அரவுக்கும் அஞ்சாதவர் நெற்றியில் வெணணீறிடாதவர்களைக் கண்டால அஞ்சுவர் எனனும் பொழுது சிவசின்னங்களின சிறப்பையும அவற்றைப் பேணுதவர்களின் மேபதமையையும எவ்வளவு தெளிவாகத் திருவாசகத்திலே நாலாவது குரவர் ஆண்டிருக்கின்றார் எனபதை உற்றுநோக்கும் பொழுது சமயநெறி புகட்டப்பட்டிருக்கும் விதம் நனகு காணக்கூடியதாயிருக்கின்றது.

### துர்க்காதேவி ஆலயத்தில் திருவாசக பாராயணம்

தெல்லிநகர் துர்க்காதேவி ஆலயத்தில் நிகழும் குருபூசை விழாவிலே திருவாசகம் முழுவதையும் பாராயணம செய்யும் பெருஞ் சாதனை (9-7-78) அன்று இடம் பெறுகின்றது

## கார்த்திகை விழா

நல்லை ஆதீனத்தில் அகில இலங்கைத திருப்புகழ் மன்றத்தார் மாதாந்தக் கார்த்திகை விழாவை ஆனித் திங்கள் நாளன்று கொண்டாடினர், சித்தாந்த பண்டிதர் மா. கனகரத்தினம் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினர்

கந்தபுராணத்திலே திருவிளையாடற் படலத்திற் சில பகுதிகள் படனஞ்செய்யப் பெற்றன, இந்நிகழ்ச்சியில் இளைப்பாறிய ஆசிரியர்கள் திரு. க. முருகேசு, திரு. ச. தர்மலிங்கம், திரு சி. தம்பிஐயா ஆகியோர் பயன் விரித்துரைத்தனர்.

### கதிர்காம வெற்பிற் கந்தனுக்கு விழா

ஆடித் திருவோணம் என்றால் மயில்மீது ஆடும் வடிவேலன் திருநாள் எனப் பத்தர்கள் ஓடி ஓடிக் கதிர்காமத்திற் கூடுவார்கள். இயற்கை வனப்பில் இயைந்த திருக்கோயிலிற்கந்தனை வழிபடுவார்கள் காவடிக் கூத்தாடுவர். மாணிக்க கங்கையில் நீராடி மனக்களிப்புக் கொள்வர் கொடியேற்றம் 5-7-78 தீர்த்தம் 2 -7-78.

## பாவங்கள் நீங்க..!

( 1, ம் பக்கத்து வளர்ச்சி )

கண்ணுக்கும் கருத்துக்கும் பெரு விருந்தென்பது அநுபவ உண்மை. இப் புராதன கோயிலிலே பெருந் திருப்பணிவேலை கிரமமாக நடைபெற்று விருத்தியடைந்து வருவதை அடியவர்கள் பார்ப்பதோடமையாது மேலும் திருப்பணி சிறப்புறஇயன்ற பொருளுதவி நலகுதல் தங்கள் இம்மைக்கும் மறுமைக்கும் திருப்பணித் தொண்டாகும் எனறறிவார்களேயானால் மாவை ஆலய மகத்தான திருப்பணி அடுத்தாண்டில் நிறைவுறும் என்பது நிச்சயம்.

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் விழாக்காலங்களிலேசொற் பெருக்காற்றுவர்.

ஆதீன கர்த்தாவும் பிரதம சிவாச்சாரியரும் ஆகும் பிரமஸ்ரீ க. து. சண்முகநாதக்குருக்கள் வழமைபோல் இவ்வொழுங்குகளைச் செவ்வனே செய்திருக்கின்றனர்.

உபயகாரரும் மாவைக் கந்தன் தொண்டியக்கத்தினரும் என்றுமப்போல ஆதீன கர்த்தாவின் அரிய ஒழுங்குகளை அடியார்களின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றுவர் என்பது சொல்லாமலே அமையும்.

## சேவைநலம் பாராட்டல்

மாணவர்களின கல்வி ஒழுக்க விருத்தியில கணணும கருத்துமாக இருந்து பாடசாலை வளர்ச்சிக்காக அலலும பகலும் அயராது உழைத்தவர் எங்கள் அதிபர் திரு. மு பாஸ்கரதேவன அவர்களாவர்.

இவ்வாறு 1-7-78 இல் யாழ். சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் 10 ஆணடுகள் அதிபராயிருந்து இளைப்பாறி வெளிநாடு செல்லவிருக்கும திரு. மு. பாஸ்கரதேவன அவர்களின் பிரியாவிடைக கூட்டத்திறகுத தலைமை வகிததுப் பேசிய திரு, க. சிவபாதம் அவாகள குறிப்பிட்டார்.

உப அதிபர் திரு கு. தியாகராசா. திருமதி நா. நல்லதம்பி. திருமதி ஏகாமபரநாதன், திரு, நடேசபிளளை, திரு, எஸ். ஐயாத்துரை, திரு. சி. சிவரத்தினம் ஆகியோர் அதிபா சேவைகளைப் பாராட்டிப் பேசினர்,

ஆசிரியர் சங்கச் சார்பில் வாழ்த்துப்பா பாடலை சங்கீத ஆசிரியா திரு. வி. பரமசாமி அவர்கள் பாடியளித்தனர். புதிய அதிபர் திரு. எஸ மகேசன அவர்களும் அதிபர் சேவைகளைப் பாராட்டிப் பேசினார்.

அதிபர் குடும்பத்தவர்களும், ஆசிரியர்களும கலந்து கொண்டனா. பொற்கிழியும் வழங்கப் பெற்றது.

மாணவர் பிரியாவிடை முதல் நாள் சிறப்பாக நடத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சம் நீங்கத் திருமுறை பாடிய குரவர்கள்

நாவுக்கரசும் ஞானக் குழந்தையும் ஒருங்கிருந்தால் இருமடங்கு திருவாகுமென்றுசொல்லவும் வேண்டுமோ! ஆனால் இவ்விரு குரவர்களும் திருவீழிமிழலைத்திருத்தலத்தில் இருந்த பொழுது வறுமை பரவிய தன் இரகசியமென்ன?

வினைப்பயனை மக்கள் அனுபவிக்க வேண்டும் அதே வேளையில் அரன் அருளும் விரவ வேண்டும் எனவே இறை வணக்கத்தின் இன்றியமையாமையை மக்கள் உணர்வதற்காக நிகழ்ந்தது இந்த விபரீதம்.

'கண்ணுதலான் திருநீற்றுச் சார்பினோர்க்கும் கவலை வருமோ' என்ற துணிவு இருபெருங்குரவர்களுக்கும் உண்டானது. பஞ்சம் நீங்கப் பரமன் அருள் உடனே தோன்றியது; படிக்காசு பெற்றனர் அடியார்க்கு அமுதளிக்கும் தொண்டு தொடர்ந்தது

ஆனால் அற்புதம் அவ்வளவில் நின்றுவிடவில்லை. அப்பருக்குரிய படிக்காசு மாசற்றதாயிருந்தமையால் நிறைவுடையதானது. அதற்குரிய பெருமதியையும் பெற்றது. கவுணியர் பெற்றது வேறுபாடுடையதாயிருந்தமை ஒரு திருப்பதிகத்துக்கு வழிசெய்தது.

வாசி தீரவே காசு நல்குவீர்
மாசின் மிழலையீர் ஏசல்
இல்லையே

இறைவ ராயினீர்
மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை
முறைமை நல்குமே

பழைய படிக்காசுக்குப் பதிலாக வளமான காசு வழங்கப் பெற்றது பஞ்சம் முற்றாக நீங்கியது.

நாயன்மார்களுக்குக் கால வேற்றுமையால் வித்தியாசம் ஒன்றுமில்லை 'காலமாறுதலினால் நீங்கள் கவலைவீரல்லீர்' என்றருளில் எழுந்த கனிமொழி

திருநீற்றின் மகிமை, வழிபாட்டின் வளம், துறை எண்ணம், இவற்றை மேலும் மேலும் மக்கள் அறிந்தவ்வழி நிறைய்ய எழுந்திருந்த அற்புதம், திருவீழிமிழலைப்பதிகம் திருவிருக்குகுறள் என்ற வகையில அமைந்தது. அதற்குப் பண் குறிஞ்சி.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**மல்லாகம் டிஸ்திறிக் கோட்டில்**

**M. B. 13586**

கோப்பாய் தெற்கு
1 தாபிழுத்து நடராசாவும் பெண்
2. சரஸ்வதிதேவியும்
— வழக்காளி

எதிராக

மயிலிட்டி
1. விஞசி சின்னத்தம்பியும் பெண்
2. மகேஸ்வரியும்
— எதிராளி

மல்லாகம் டிஸ்திறிக்கோட்டின் M B 13586ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னும் விவரிக்கப்படும் துண்டுக்காணி, 1978ம் ஆண்டு ஆடி மாதம் 20-ம் திகதி (20-7-1978) வியாழக்கிழமை முற்பகல் 10-45 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை:-

முதல் வட்டி ரூபா 6500/-ம் 8-1-73 தொடக்கம் 28-6-73 வரைக்கும் ரூபா 5000/-க்கு 15 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 555 சதம் 35ம் முழுத்தொகையிலும் ரூபா 3950/- கழித்து மீதி முழுவதும்.

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டிக் கோவிற்பற்று முலவை இறை கழுத்தாவத்தை நி. பர. 2 பயிர் வகைகளும் இந்தப் பரப்பு இரண்டுக்கும் எல்லை கிழக்கு :- பசுபதி சிவகுருவிற்கும் பெண் நேசம்மாவுக்குமுரிய ஆதனம், வடக்கு :- புதிதாக வைக்கப்பட்ட ஒழுங்கை மேற்கு:- துரையன் இராசாவிற்கும் பெண் செல்வமணிக்கும் உரிய ஆதனம், தெற்கு :- வல்லி கதிரனுக்கும் வயிரவன் மாலாணிக்குமுரிய ஆதனங்கள், இதடங்கலிலும் இதன் கிழக்கெல்லை ஆதனத்தின் கிழக்கெல்லை ஆதனத்துக்குள் இருக்கும் கிணற்றிலும் துரவையிலும் இதற்குரிய பங்கும் குறித்த வடக்கெல்லை ஒழுங்கைக் கூடாக குறித்த கிணறது மேற்கே இருக்கும் றோட்டுக்கு போக்குவரவு செய்யும் பாதையுரித்தும்.

2. ஷெ முலவை இறை கழுத்தாவத்தை நி பர. 3 மூன்றும்; வீடும். பயிர் வகைகளும், வட மேற்கெல்லையான நேசம்மாவின் காணிக்குள் இருக்கும் கிணற்றில் மூன்றில் ஒரு பங்கும் எல்லை கிழக்கு;- றோட்டு வடக்கு :- சிவகுரு பெண் நேசம்மாவுக்கும் இராசா பெண் செல்வமணிக்குமுரிய ஆதனங்கள், மேற்கு :- மாதன் கைம்பெண் சேதிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், தெற்கு :- தவசி சின்னவனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் இதடங்கலும்.

சி. சோ. நரசிங்கம்
நீதிமன்ற விற்பனையாளரும் மதிப்பாளரும்,
கொல்புரம்
15-5-78.

136 7-7-78

### திருச்சிற்றம்பலம்.

## தெய்வானை அம்மன் திருக்கல்யாணப் படிப்பு

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை ஆதரவில் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்று வரும் கந்தபுராண படனத்தின் ஒரு பகுதியாகிய "தெய்வானை அம்மன் திருக்கல்யாணப் படிப்பு" 13-7-78 வியாழக்கிழமை விசேட பூசைகளுடன் பிற்பகல் 4-30 மணி தொடக்கம் நடைபெறும்.

X X X

சைவ பரிபாலன சபை ஆதரவில் சபைநாவலர் ஆச்சிரம மண்டபத்தில் மணிவாசகர் குருபூசை 9-7-78 ஞாயிறு முற்பகல் ஆரம்பமாகி வழமைபோல நிகழும்.

சைவாபிமானிகள் அனைவரும் சமூகமளிப்பார்களாக.

க. சிற்றம்பலம்,
செயலாளர்.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்

சைவபரிபாலனசபை, யாழ்ப்பாணம், 5-7-78.

## பூசை அர்ப்பணமாகப் புராண படனம்

குருபூசைகளிலே வழிபாட்டுடன் சொற்பெருக்குகள் நிகழ்வதே வழக்கம். ஆனால் சாற்பெரும் குரவர்கள் நன்னாட்களிலே அவர்கள் புராணங்களைப் படனஞ் செய்வதே சிறந்த முறை.

திருவாதவூரடிகள் புராணம் தனிச்சிறப்புடையது, சைவ சித்தாந்த சாரமாக அமைந்துள்ளது. விசேடமாகத் திருப்பெருந்துறைச் சருக்கத்திற் குருந்த மர நீழலில் வந்திருந்த பரமாசாரியரின் பேருபதேசப ஆரமுதம்போன்றது. அத்தனையையும் ஆனி மகத்தன்று அடியார்கள் மறுபடியும் கேட்டின்புறப் புராண படனம் செய்தல் மேலான வழிபாடாகும்.

இடையிடையே திருவாசகச் செழுந்தேனை ஓதுவார்கள். ஓதி அடியார்களுக்குத் தெவிட்டா அமுத பூசை செய்தல் வேண்டும்.

உடம்பில் உறுப்புக்கள்
ஒல்வொன்றும் ஓடி
நடம்பயில வைகளும்
நரம்பின — இடம்புகுந்(து)
உள்ளம் உருகவிக்கும்
ஒப்பில உணர்ச்சிக்குத்
தெள்ளு திருவா சகம்.

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

**பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்**

**வழக்கு இலக்கம் சுஉ / 13919**

கணபதிப்பிள்ளை தியாகராசா அல்வாய் வடக்கு, அல்வாய்
— வழக்காளி

எதிராக

அமாதோர் அருள் மரியாம்பிள்ளை அல்வாய் வடக்கு, அல்வாய்
எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனம் 1978-ஆம் ஆண்டு ஆவணி மீ 5-ஆம் திகதி (5-8-78) சனிக்கிழமை முற்பகல் 9-00 மணியளவில் குறித்த ஆதனத்துள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மேற்குறித்த எதிராளி குறித்த வழக்காளிக்கு ரூபா 9950உம் மேலும் ரூபா 5000/-துக்கு வருடமொன்றுக்கு 18% வட்டி விதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1977ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 29ம் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 9 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 250/-. கொடுக்க வேண்டும்.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வடமராட்சிப் பகுதி கட்டவேலி கோவிற்பற்று அல்வாய் பெருமியார் குறிச்சி இறை, சட்டம் பிளாவத்தை நி. பர. 43. 3/4 இதில தெற்குப புறமாக நி. பர. 29 குளி 3 (நிலபரப்பு இருபத்தொன்பது குளி மூன்று) பனைகள், வடலிகள், கிணறும், எல்லை கிழக்கும். மேற்கும் :- வெற்றிவேலு சின்னையாவின உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுடையவாதனம், வடக்கு :- இராயப்பு தொம்மைப்பிள்ளை செல்லத்துரைக்கும் பெண் மரியை றோசலினுக்குமுரிய ஆதனம், தெற்கு;- தெரு, இதடங்கலிற செரிியலாய் இருபத்து நாலில் பதினொரு பங்கில் பன்னிரண்டில பதினொரு பங்கும்.

ஆதனத்தின் மதிக்கப்பட்ட விலை ரூபா 14895/-

மா. வே. புவனேந்திரன் J. P.
நீதிமன்ற விற்பனவு கொமிஷனர்,
விலைமதிப்பாளர்

"கமல கிரி"
புலோலி மேற்கு,
பலோலி.

137, 7-7-78

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

**பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்**

**வழக்கு இல: சுஉ 13210**

1. ஆறுமுகம் சுபபிரமணியமும்
2. பெண் வள்ளியம்மாவும், துன்னாலை தெற்கு
— வாதிகள்

எதிராக

1. கந்தையா நமசிவாயமும்
2, பெண் மீனாட்சியும்; சோதியில், முள்ளியவளை
— பிரதிவாதிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனத்தை 1978-ஆம் ஆண்டு ஆகஸ்ட் (ஆவணி) மாதம் 19-ஆம் திகதி (19-8-1978) சனிக்கிழமை முற்பகல் 9-00 மணியளவில் குறித்த ஆதனத்துள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மேற்குறித்த பிரதிவாதிகள் குறித்த வாதிகளுக்கு ரூபாய் 6250/-வும் மேலும் ரூபா 4000/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு ஒன்பது வட்டி விதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1975ம் ஆண்டு ஆவணி மாதம் 5ம் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1975ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31-ம் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தாவை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீதவட்டியும் வழக்குச் செலவு ரூபா 348-35 (இதில் நடைபெற்ற செலவு ரூபா 188-40 நடைபெறவேண்டிய செலவு ரூபா 79-55 மேலதிக சமயாசமயச் செலவு ரூபா 89-40), கொடுக்க வேண்டும்

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி கட்டவேலிக் கோவிற்பற்று துன்னாலை செகறகொடிதேவன் குறிச்சியிலுற கிராவளை நி. பர. 1½ பனைகள்; வடலிகள், வீடு, கொட்டிலகள், கிணறும், எல்லை கிழக்கு :- இராமு பெண் சிவகாமிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், வடக்கு :- ஒழுங்கை, மேற்கு :- கந்தையா மகாலிங்கத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், தெற்கு :- சின்னத்தம்பியார் அம்பலவிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இவ்வெல்லைக்குள் கிழக்கு பக்கமாக கட்டியிருக்கும் இரண்டறைப் பெரிய கல்வீடு பிற நீங்கலாக வடக்குப் பக்க வீடு சொந்தமாகவும் நிலம் அடங்கலிற சொரியலாக நி பர. 3½யும் பனைகள், வடலிகளில் பயிர்பங்கு நாலிலொன்று பிறநீங்கலாக மற்றயவைகளில் இதற்குரிய பங்கும்.

ஆதனத்தின் மதிக்கப்பட்ட விலை ரூபா 13000-00

மா. வே. புவனேந்திரன் J. P.
நீதிமன்ற விற்பனவு கொமிஷனர்,
விலைமதிப்பாளர்

"கமல கிரி"
புலோலி மேற்கு,
புலோலி.

138, 7-7-78

## சைவமணி சங்கீதபூஷணம் சி. விஞசித்தம்பிக்கு பாராட்டு விழா

30-6-78 மாலை 6-30 மணி தொடக்கம் சாவகச்சேரி வாரிவனநாதர் சிவன்கோயில் முன்றலில் பிரமஸ்ரீ அ. சோமசுந்தரக்குருக்கள் அவர்கள் தலைமையில் சைவமணி சங்கீதபூஷணம் சி. விஞசித்தம்பி அவர்களுக்குப் பாராட்டு விழா நிகழ்ந்தது. திரு. இ. த. சுப்பிரமணியம் வரவேற்புரைத்தனர். இலக்கியகலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் ஆசியுரை வாசிக்கப்பெற்றது. திரு வ. ந. நவரத்தினம் அவர்களும் சைவமணி வித்துவான் மு சபாரத்தினம் அவர்களும் திருமதி உமையம்மா சிவசம்பு, திரு அ. பொ. செல்லையா, சங்கீதபூஷணம் அ. கி ஏரம்பமூர்த்தி ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றினர். சிவநெறிச் செல்வர் சி. விஞசித்தம்பி அவர்கள் பதிலுரையின் பின் இசைமணி திருமதி மோகனம் பிள்ளை கணேசன் இசைமணி திருமதி பூமணி இராசரத்தினம் ஆகியோர் இசை விருந்தளித்தனர்.

சைவப் புலவர் கு. வி. மகாலிங்கம் நன்றியுரை [illegible]

அழுக்காறு அவாவெகுளி இன்னுச்சொல்
இழுக்கா வியன்றது அறம். [நான்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THOUGHTS TO BE TREASURED

தத்துவம் நீக்கி மருள் நீக்கித் தானாகிப்
பொய்த்தவம் நீக்கி மெய்ப் போகத் துட் போக்கியே
மெய்த்தசக முண்டு விட்டுப் பரானந்தச்
சித்திய தாக்கும் சிவானந்தத் தேறலே.

(If you drink) the honey of Godly bliss, it will rid you of the (world of five elements and other) Tatwas, it will rid you of false asceticism, it will rid you of all worldliness, it will make you pure, it will lead you to true enjoyment, it will lead you to the attainment of Supreme Bliss.

Hindu Organ

Friday, July 7, 1978.

# TRADING ON ANOTHER'S RELIGIOUSNESS

The lists for subscriptions or donations for religious purposes have become a regular feature in this country. They are in circulation all the year round. Ostensibly, the objects are for some religious undertaking — the renovation of a shrine, the performing of some spiritual ceremonies, the construction of a resting place, the feeding of the poor and so on. Everyone of these purposes will naturally touch the religious person and will not fail to induce him to respond to the call of charity. Often the unsuspecting devotee readily obliges the collector with a payment without for a moment pausing to find out more particulars about the collection and the authenticity of the 'list'. How many such lists reach the places for which the donors had intended their gifts is a question that has to be raised and answered. Does the entire amount of these collections go to the funds of the stated purposes? What proportion of the donations gets into the private purses of the collector? It has, therefore, become necessary for religious minded persons to be wary in the matter of subscription lists and collection charts There have been instances of bogus collectors who were habitually trading on the religiousness of unsuspecting people.

On the other hand societies that function on behalf of shrines should take sufficient precaution against corrupt practice by notifying in the newspapers particulars of lists for collection including the names of persons who are authorized for the purpose.

The devotee is always anxious to contribute his mite for religious purposes. The renovations of several ancient temples have to be sustained by the support of the public. Hence it is the duty of all concerned to keep the bogus collector away from the devotee.

## Auction Sale

All the unredeemed jewelleries pawned with R. Thuraiappah & Sons, Licensed Pawn Broker of Tholpuram from 5-6-74 to 31-12-75 will be sold by me by public auction at the said Pawn Shop on Wednesday, 12-7-78 commencing at 8.00 a.m.

Vithanai Valavu
Sithankerny
12.6.78

S. S. Marimuttu
Commissioner & Auctioneer

# Mahatma Gandhi's Ideology

By S. SIVASUBRAMANIAM
Hony. Secretary, Council for National Unity and Welfare



As is natural, references are made very often in Sri Lanka to the noble and saintly personality of Mahatma Gandhi and his ideals. It is superflous to add that he is held in very high veneration, if I might say so with the utmost deference arising out of this situation, it is important to bear in mind certain aspects relating to Mahatma's procedure adopted in South Africa and in India and his methods of action It is vital in the interest of Sri Lanka that attention is drawn to some certain aspects of his principles, policy and activities With this object in view, the following humble submissions are made, the same being not exhaustive on the subject.

Firstly, it is necessary to remember that we do not have and did not have leaders of the calibre of Mahatma Gandhi. This statement is made with all respect to our leader ship. On the occasion of Mahatma Gandhi's Centenary Celebrations in Sri Lanka, I considered it a blessing to have been able to quote the following tribute of Dr. Radhakrishnan, Philosopher and World Statesman and President of the Republic of India:-

"Possessed and inspired by the highest ideals of which human nature is capable, preaching and practising fearlessly the truth revealed to him, leading almost alone what seemed to be a forlorn hope against the impregnable strongholds of greed and folly, yet facing tremendous odds with a calm resolution which yielded nothing to ridicule or danger Gandhij presented to the unbelieving world all that is in the noblest of man He illumined human dignity by faith in the eternal significance of man's effort He belongs to the type that redeems the human race.......

"Such men who are filled with spiritual poise and yet take upon themselves the burden of suffering humanity are born into the world at long intervals.

"The spirit in him which is a light from above will penetrate far into space and time and inspire countless generations for nobler living."

The substance of this tribute ifs too high for local application in Sri Lanka. Hence along with other reasons, the methods of actions and proce dings followed by him in two other countries and under different set of circumstances cannot be automatically followed in Sri Lanka in the present era.

(To be continued)

## Saiva Periyar Centenary Reproduction

# GLORIES OF SHAIVAISM

*By S. Shivapadasundaram* B A.

(continued from last issue)

Manickavachagar, the Devarakarar and Arulnandhi have said that these works have come from God. Every religion has its own sacred books supposed to have come either from God or a saint. The revelation of the Christians is the Bible. that of the Muslims is the Koran, that of Buddhists, the Tripitaka, and so on. Just as no one would be regarded as a Christian who denies the sacredness of the Bible or as a Muslim who denies the sacredness of the Koran, so no one would be regarded as a Shaivite who refuses to accept this supreme authority of the Vedas and Shaivagamas.

As the Vedas are the authoritative works of several other religions also and all have the right to read them, they are still in existence and have gone even to Europe and America But the Shaivagamas, held sacred only by the Saivites and accessible only to those who have had the final Deeksa have been less fortunate. Most of them seem to have disappeared within the last two centuries. Sivagnana Munivar who lived about two hundred years ago, refers to the Shivagamas in his commentaries, but does not complain of the loss of any of them. English education attracted the best of intellects during the last one hundred years and left none to study the Shaivagamas which must therefore, have either been thrown away or eaten by white ants.

Fortunately for us the Kiriya portion of the Agamas are save in the hands of our priests and Gnana portion handed to us in Tamil by our Tamil saints. Thirumoolar who seems to have lived more than two thousand years ago has given us in his Tirumantram some portions of the Gnana section of the Shivagamas. Shivagnanabodham which is a portion of the Rourava Agama and also its essence was taught by the Paramachara to Manicavachakar about fifteen centuries ago. He reproduced some teachings of Shivagnana-bodham in his Thiruvachakam. Paranjothi Munivar taught the same Sivagnana-bodham to Meihandhadevar and asked him to translate it into Tamil. In obedience to his Guru's order, Meihandhadevar translated into Tamil and added some notes.

(To be continued)

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road, Vannarponnai, Jaffna on Friday, July 7, 1978.

EDITOR-IN-CHIEF: R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org